பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 25 வியாழக்கிழமை (08.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 75

# வாகரையிலிருந்து படைகளை அரசு விலக்கினால்தான் பேச்சுக்கு வாய்ப்பு!

## தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை சபையில் நேற்று அறிவித்தார் ஸ்ரீகாந்தா

கொழும்பு, பெப்ரவரி 08

**கிழக்கில் அண்மையில் கைப்பற்றிய வாகரை, கதிரவெளி பிரதேசங்களில் இருந்து அரசுப் படைகள் வாபஸ்பெறப்பட்டு, 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது இருந்த களநிலைமை மீண்டும் ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே இனி சமாதானத்துக்கு வாய்ப்புக் கிட்டும்.**

**அவ்வாறானதொரு சூழ்நிலையை அரசு உருவாக்குமானால் மீண்டும் பேச்சுக்குத் திரும்புமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளை வற்புறுத்தும்.**

**- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் ஸ்ரீகாந்தா எம்.பி.**

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் படி, 2002ஆம் ஆண்டில் இருந்த நிலை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேசங்களில் இருந்து இராணுவம் வாபஸ்பெறப்பட்டு தினசரி இடம்பெறும் கொலைகளும் கடத்தல்களும் நிறுத்தப்படுமானால் அரசுடன் பேச்சுகளை நடத்த புலிகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

ஸ்ரீகாந்தா தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

இலங்கை அரசு 59ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடியபோது தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் 2000 பேரை விடுதலை செய்து சிறைக்கு வெளியே அனுப்பியது.

ஆனால், அதே தினத்தில் கொழும்பில் 600 தமிழர்களை காரணமின்றி கைது செய்து சிறைக்குள் தள்ளியது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

இவர்களிடம் ஆள் அடையாள அட்டைகள் இருந்தன. கொழும்பு வந்தமைக்கான ஆவணங்களும் அத்தாட்சிகளும் இருந்தன. ஆனால் இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால் கைது செய்யப்பட்டு பூஸாசிறையில் அடைக்கப்பட்டனர்.

இது அடிப்படை உரிமை மீறலாகும்.

**பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தில் பொதுமக்கள் கொன்று குவிப்பு**

இப்போது வடக்கு, கிழக்கில் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் நடைபெறு

(04 ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகள் கப்பல் கட்டணம் உயர்கிறது

யாழ்ப்பாணம், பெப்.8

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடவிருக்கும் 'ஒஸானிக் கிறீன்' என்ற கப்பலுக்கான பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரைஇக்கப்பலின்ஒருவழிப்பயணக் கட்டணம் ஆயிரத்து 500ரூபாவாக இருந்தது.

இக்கப்பல் சேவையை மீள ஆரம்பிக்கும்போது கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் - புதிய கட்டணம் ஒருவருக்கு இரண்டாயிரத்து 587 ரூபா 50சதமாக இருக்கும் என்றும் - யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார். (அ-1)

### காங்கேசனுக்கு ஆயிரம் பயணிகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு நேற்று ஆயிரம் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் கூடிய மக்களில் அவசர பணிக்காகச்செல்லும் ஆயிரம் பயணிகள் தெரிவு செய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் -

அவர்கள் கப்பல் மூலம் திருமலைக்கு அழைத்துச்செல்லப்படுவர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை- பயணிகள்கப்பல் சேவை குறித்து நேற்றிரவு வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். (அ-1)

## பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் 31 பேர் நேற்று நீதிமன்றத்தால் விடுவிப்பு

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பூஸா முகாமில் வைக்கப்பட்டிருந்தோரில் 31 பேர் நேற்று புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

வத்தளை, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை பகுதிகளில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்கள் விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என கொழும்பு மாவட்ட மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பி. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுவரையில் பூஸா முகாமிலிருந்து 90 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஏனைய இளைஞர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுத்து வருகின்றார் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தெஹிவளை, வெள்ளவத்தை, கல்கிஸை, கொடுவல ஆகிய பொலிஸ் நிலையங்களில் சுமார் இருபதுக்கும் அதிகமான இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது விடுதலை தொடர்பாக மேற்படி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி.பி.பத்திரனவிடம் தாம் பேசியுள்ளார் என்றும் - அவர் தெரிவித்தார்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களது பெயர், ஊர் விவரங்கள் வருமாறு:-

அந்தனி தனேந்திரன் (வயது - 31) - யாழ்ப்பாணம், எம்.ஜெகநாத் (வயது-27) - யாழ்ப்பாணம், எஸ்.பிளன்டினி (வயது-22) - யாழ்ப்பாணம், எஸ்.சுதர்ஷன் (வயது-21) - யாழ்ப்பாணம், ஏ.ஜுலியன் சார்ள்ஸ் (வயது-22) - குருநகர், த.சண்முகவடிவேல் (வயது-33 - கனடா (யாழ்ப்பாணம்), எஸ். ஜே.சந்திரசேகரன் (வயது-23) - யாழ்ப்பாணம், ஜே.கஜேந்திரன் (வயது-21) - யாழ்ப்பாணம், டி.சுரேஸ்குமார் (வயது-31) - யாழ்ப்பாணம், எஸ். சுதர்ஷன் (வயது-23) - யாழ்ப்பாணம், எஸ்.சதீஸ்குமார் (வயது-21) - மட்டக்களப்பு, எஸ்.யாதவன் (வயது-23)

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் கறுப்புச் சால்வையுடன் சபைக்கு நேற்று வருகை

கொழும்பு, பெப்.8

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கறுப்பு நிற சால்வை அணிந்து சபைக்கு வந்திருந்தனர்.*

*அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்று நடைபெற்றவேளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கறுப்புச் சால்வை அணிந்து வந்திருந்தனர்.*

*தமிழர் தாயகப் பகுதிகளில் அரசுப் படைகள் தொடர்ந்து மேற்கொண்டுவரும் நில ஆக்கிரமிப்புக்கள் மற்றும் தமிழர்கள் கைதுசெய்யப்படுதல், கடத்தப்பட்டுக் கொல்லப்படுதல், காணாமற்போதல் ஆகிய கொடுமைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதற்கும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தவே கூட்டமைப்பு எம்.பிக்கள் கறுப்புச் சால்வை அணிந்து விவாதத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிகிறது.* [ஐ-1-2]

## இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்கும் ஆவணமாக விளங்குகிறது போர் நிறுத்த ஒப்பந்தம்

### பேச்சாளர் ஓமர்சன் சொல்கிறார்

கொழும்பு,பெப்.8

போர்நிறுத்த உடன்படிக்கை இன்னமும் செயல் இழந்துவிடவில்லை. மோதல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்கும் ஓர் ஆவணமாக அந்த உடன்படிக்கை உள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்வதானால் அதற்காக இரண்டு தரப்பினரையும் ஒன்றிணைப்பதற்கான ஒரேயொரு ஆவணமாக போர் நிறுத்த ஒப்பந்தம் மட்டுமே உள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

போர்நிறுத்த உடன்படிக்கையைத்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்தில் கைதான ஊடகவியலாளர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பாம்

### கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் எனக் கூறப்படும் மூவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியான தொடர்பு வைத்திருந்தனர் என விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சந்தேக நபர்களால் வெளியிடப்பட்ட வாக்குமூலங்கள் தொடர்பான ஒலிப்பதிவு நாடாவை தேசிய ஊடக பாதுகாப்பு மையம் நேற்று ஊடகவியலாளர்களுக்கு வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலியரம்புக்வெல தெரிவித்திருப்பதாவது:-

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் வைத்து ஆயுதம் மற்றும் வெடிகுண்டுகளை வெடிக்க வைக்கும் பயிற்சிகளை சுமார் 10 நாள்களுக்கு மேலாக வழங்கியுள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடங்களில் பெருமளவான 'சி-4' போன்ற சக்தி வாய்ந்த வெடிபொருள்களும், பிஸ்டல், ரி-56 ரக துப்பாக்கிகள், இரு கிளைமோர்கள், கண்ணிவெடிகள் எனப் பலவகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. இம்மூவரும் கொழும்பு மாவட்டத்தில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்தனர். அவ்வாறான நடவடிக்கைகளில் நேரடியான தொடர்புகள் உள்ளவர்கள் என்றும் தெரியவந்துள்ளது - என்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

855 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் **05 06 07 40**

**06-02-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4829771 - 4845299

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 342,525 | 10/- | 3,425,250/- |
| 2 இலக்கங்கள் | 31,406 | 20/- | 628,120/- |
| 1 இல. + லக்கினம் | 31,112 | 30/- | 933,360/- |
| 2 இல. + லக்கினம் | 2,852 | 100/- | 285,200/- |
| 3 இலக்கங்கள் | 841 | 500/- | 420,500/- |
| 3 இல. + லக்கினம் | 80 | 5,000/- | 400,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,492,430/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 408,825 | | 7,515,930/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,764,600/-

தொடர் இல. 5716161 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 பெப்ரவரி 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4845038-0-82 |
| மொனராகலை | 4832370-6-90 |
| கம்பஹா | 4836663-2-15 |
| திருகோணமலை | 4833115-2-39 |
| அம்பாறை | 4833589-9-28 |


## சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவப் பெருந் திருவிழா கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.


எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த்திருவிழா மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

* * *

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலுள்ள லூர்த்து கெபித் திருவிழா திருப்பலி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு வண பிதா டபிள்யூ எக்ஸ் யேம்ஸ் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.

(202-51)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



மல்லாகம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
றிச்சேட் - அன்னமேரி தம்பதியரின்
அருந்தவப்புதல்வன் செல்வன்

**மோசேஸ் ஸ்ரேவனோ**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.02.2007) வியாழக்கிழமை இத்தாலியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை இத்தாலியில் வசிக்கும் அப்பா, அம்மா, நோர்வேயில் வசிக்கும் ஞானப்பெற்றோர் செல்வம், வசந்தி, லொயிற்ரா, கெவின் குடும்பத்தினர், இத்தாலியில் வசிக்கும் டொறிஸ் அத்தை, ராஜா மாமா, மச்சாள் றிபெல்லா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மம்மா, பெரியம்மா (கிளி), பெரியப்பா (ராசா), கமில்ற்ரன் அண்ணா, றுபீனா அக்கா, சித்தி (வவா) சித்தப்பா (செல்வராசா), குமார் மாமா (டோகா), றூபிமாமி, மல்லாகத்தில் வசிக்கும் மல்லிகா அத்தை, ஜெயக்குமார் மாமா, டினுஷாந்த், மரியஷெரோன் மச்சான், ஸ்ரெபானி மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை குழந்தை யேசுவின் அருளால் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.


08 02 2007

Happy Birthday

செல்வன் **மோசேஸ் ஸ்ரேவனோ**

றிச்சேட் - அன்னமேரி தம்பதிகள்.
பலர்மோர், இத்தாலி.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் பாஷான உத்வாசன சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



எமது குடும்பத் தலைவர்

**சுப்பிரமணியக்குருக்கள் சிவானந்தராஜா ஐயா**

அன்னை மடியில்: 14 - 11 - 1952
அப்பன் அடியில் :25 - 01 - 2007

ஐயா அவர்களின் மரணத்தின் பொழுது சகல வழிகளிலும் உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்திகளை அச்சிட்டும் தொலைபேசி மூலமும் வெளிப்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். 09.02.2007 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(57820)

## துயர் பகிர்வோம்

எமது கல்லூரி அதிபர் குகதாசன்
அவர்களின் அன்பு மனைவி

**குகதாசன் மகேஸ்வரி**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்கள்,
விவசாயக் கல்லூரி, மருதனார்மடம்.

(57823)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

மலர்வு: 15 ★ 08 ★ 1932 உதிர்வு: 14 ★ 01 ★ 2001

ஈர விழிகளுடன்
ஆறாண்டுகள் ஓடினாலும்
நித்தம் உங்கள் நினைவு
எம் மனதை வாட்டுதிங்கு
உங்கள் ஆத்மசாந்திக்காய் வேண்டும்

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(57678)

## மரண அறிவித்தல்

**திருமதி சுந்தரமூர்த்தி நாகபூசணி (வேவி)**



கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 124, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரமூர்த்தி நாகபூசணி (வேவி) 06.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வியும் அமரர் சின்னையா சுந்தரமூர்த்தியின் மனைவியும் சுயந்தன், சுரேந்திரா, சுபத்திரா,சுதர்சன், சுகிர்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பதேவி, சிவபாதலிங்கம் (சுவிஸ்), ஜெயபாலசிங்கம் (சில்லாலை), தனபாலசிங்கம் (அரியாலை), குணபாலசிங்கம் (கனடா), இரஞ்சினிதேவி (கனடா), மஞ்சுளாதேவி (கனடா), பஞ்சபாலசிங்கம் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் சிறீரங்கனின் (கம்சன் - பிரான்ஸ்) பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0776675045

தகவல்:
சு.சுயந்தன் (மகன்).

## துயர் பகிர்கின்றோம்

எமது ஆலய பரிபாலனசபை முன்னாள் பொருளாளராக இருந்து
ஆலய முன்னேற்றத்துக்கு தனது மதிநுட்பத்தாலும்
அனுபவத்தாலும் பெரும் சேவை செய்து பெருமை பெற்ற

**டாக்டர் V.குகமூர்த்தி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய அரசடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

மணிக்கூட்டு வீதி,யாழ்ப்பாணம். ஆலய பரிபாலன சபை, அரசடி விநாயகர் ஆலயம்.

## முதலாம் ஆண்டு நினைவில்....



மலர்வு:
1972 . 07 . 24
உதிர்வு:
2006 . 01 . 20

அமரர்

**துரைராசா ரவிச்சந்திரன்**

திதி: 08.02.2007


ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
வாடாத மலர் போன்று
வாழ்ந்தாயே எம்மோடு
நீங்காத நினைவோடு
வாழ்கின்றோம்.

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

மனைவி, மக்கள், தந்தை, தாய்,
சகோதரர்கள், சகோதரிகள்.

(57806)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் அணைப்பில்
29.11.1931
ஆண்டவன் இணைப்பில்
09.01.2007

அமரர்

**கோபால் துரைசிங்கம் (ஜே.பி)**

(யாழ்.வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையச் சூழலைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல சமூக சேவையாளர்)

திதி: ஷஷ்டி

அன்பின் திருவுருவாய்
பண்பின் திருவுருவாய்
பாசத்தின் வழிகாட்டியாய்
சேவையின் பிறப்பிடமாய்
சமூகத்தின் காவலனாய்
வாழ்ந்த எங்கள் பப்பா...
எம்மை விட்டு நீங்கி முப்பத்தொரு
நாளென்ன முப்பத்தொரு யுகங்கள்
சென்றிடினும் நாம் உ...மை மறவோம்.

இன்று (08.02.2007) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:
கோ.மோகன் (ஜேர்மனி),
கோ.வாசன் (நோர்வே),
திருமதி இ.லலிதா,
திருமதி இர.தேன்மொழி.

'மோகன் இல்லம்',
வல்வெட்டி.

(சி-51837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## அதிகாரப் போட்டா போட்டியில் சிதைவுறும் அமைதி முயற்சிகள்

*"தமிழரின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே சிங்கள ஆளும் வர்க்கங்கள் காலம் காலமாக தமக்கிடையே அதிகாரப் போர்களை நடத்தி வந்திருக்கின்றார்கள். இப்போர்கள் மூலமே தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைப்படுத்தி பலப்படுத்த முனைந்துள்ளார்கள். இந்த அதிகாரப் போர்களாலும் அதன் விளைவாகத் தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாது மேலும் மேலும் சிக்கலடைந்த காரணத்தினாலுமேயே சமாதான முயற்சிகள் காலங்காலமாகத் தோல்வியில் முடிவடைந்தன."*

- இவ்வாறு சமாதானப் பேச்சுகள் பற்றிய தமது மதிப்பாய்வில் விடுதலைப்புலிகள் அமைப்பின் மதியுரைஞராக விளங்கிய 'தேசத்தின் குரல்' அமரர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் அரசியல் பரிமாணங்களைத் தெளிவாக எடுத்தியம்பும் தமது 'போரும் சமாதானமும்' என்ற நூலின் இறுதியில் அமைதிப் பேச்சுகள் பற்றிய மதிப்பாய்வில் - முத்தாய்ப்பாக - இவ்வாறு அவர் குறிப்பிட்டமை இன்றும் நிஜமாகி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மதியுரைஞர் பாலசிங்கத்தின் அப்போதைய கூற்றை இப்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

*"தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிச்சையாக மேற்கொண்ட முடிவுகளும் செயற்பாடுகளும் நாட்டில் நிரந்தரமான சமாதானத்தையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பைத் தகர்த்து விட்டன. அத்துடன், நாட்டின் எதிர்காலத்தை யும் அவை கேள்விக்குறியாக்கி விட்டன."* - என்று நாடாளுமன்றத்தில் பெரு விசனத்துடன் குறிப்பிட்ட எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதன் மூலமே மதியுரைஞர் பாலசிங்கம் முன்னர் குறிப்பிட்ட அதே உண்மையை மீளவும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, அதன் அடிப்படையில் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் தடத்தில் அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுகளை விடுதலைப் புலிகளுடன் ரணிலின் முன்னைய அரசு ஆரம்பித்தது.

இடைக்கால ஏற்பாடாக ஒரு தீர்வுத்திட்டத்தை விடுதலைப்புலிகள் சமர்ப்பிக்கும் ஒரு தீர்க்கமான கட்டத்தை அந்த அமைதி முயற்சிகள் எட்டிய சமயத்தில், அப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்றப் பலத்தையும், அதிகாரத்தையும், செல்வாக்கையும் தம்வசம் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் - அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - ரணில் அரசின் முக்கிய அமைச்சுக்களைப் பிடுங்கினார். இரண்டொரு மாதத்தில் ரணிலின் அரசை, நான்கு ஆண்டுகள் முன்கூட்டியே கலைத்து, பௌத்த - சிங்களப் பேரினவாதிகளோடு அணிசேர்ந்து, பொதுத்தேர்தலை எதிர்கொண்டு - எதிர்பார்த்தபடியே - தாம் இலக்கு வைத்தபடியே - நாடாளுமன்ற அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டார்.

அதிகாரம் மற்றும் செல்வாக்கு மீதான சிங்களத் தலைவர்களின் போட்டா போட்டி காரணமாக - குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகாவின் பேராசை காரண மாக - அப்போதைய சமாதான முயற்சிகள் நசுங்கிப் போயின.

மீண்டும் தமிழர் தரப்போடு, தென்னிலங்கை தனக்குள் ஐக்கியப்பட்டு அமைதி முயற்சிகளை முன்னெடுக்கக் கிடைத்த பொன்னான வாய்ப்பு இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதீத அதிகார ஆசையால் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. அதையே எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தாம் ஆற் றிய உரையில் விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக் கின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதி முயற்சிகளை ஒன்றுபட்டு அணுகுவது என்று இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்குள் உடன்பாடு கண்டன. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் ஓர் அமைதித் தீர்வைக் காண்பதற்கு முன்னோடியாகத் தென்னிலங்கையில் பரந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சரித்திரபூர்வ நிகழ்வாக இந்த உடன்பாடு பலராலும் விதந்துரைக்கப்பட்டது. சர்வதேச சமூகத்தாலும் வரவேற்கப்பட்டது.

அந்த உடன்பாட்டின் வழியில் அமைதி முயற்சிகளை முழு மூச்சாக முன்னெடுப்பதை விடுத்து, அப்போது கிடைத்த அரசியல் குழப்ப நிலையைப் பயன்படுத்தி, அரசியல் 'அந்தர் பல்டி' களை ஊக்குவித்து, ஐ. தே. கட்சியின் ஒன்றரை டசின் எம். பிக்களை அமைச்சர் பதவியாசை காட்டித் தம்பக் கம் வளைத்துப்போட்டு, ஆளும் தரப்புக்குக் குத் துக்கரணம் அடிக்கவைத்து, ஸ்ரீல. சு. க. - ஐ.தே.க. நல்லிணக்க உடன்பாட்டை முளையிலேயே கருக்கிவிட்டார் அதிபர் மஹிந்தர்.

இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. தமது கடந்த மாவீரர் தினத்தை ஒட்டித் தாம் ஆற்றிய உரையில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இதைத் தெளிவாகவே சுட்டிக்காட்டியிருந்தார்.

*".... கடந்த ஐந்து தசாப்தங்களாக மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரு பிரதான சிங்களக் கட்சிகளும் தமிழரின் தேசியப்பிரச்சினையைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகளைப் புறநோக்காக ஆராய்ந்து பார்த்தால், இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள இரு கட்சி இணக்கப்பாடு என்பது உலகத்தை ஏமாற்றுவதற்கான வெறும் கண்கட்டுவித்தையே தவிர வேறன்று என்பது புலப்படும்"* - என அவர் அப்போது குறிப்பிட்டமை இப்போது நிரூபணமாகிறது.

ஆகவே -

அதிகாரப் போர்களிலும், செல்வாக்குப் போட்டா போட்டிகளிலும் வெற்றியீட்டுவதற் காகத் தமிழரின் இனப்பிரச்சினையை வசமாகப் பயன்படுத்தும் தென்னிலங்கைத் தலைமை களால் தேசிய இனப்பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான நியாயமான தீர்வு ஒன் றைத் தருவதற்கோ, சமாதானத்தை எட்டுவதற் கான திசையில் நாட்டை வழிநடத்துவதற்கோ இயலாது என்பதை இச்செயற்பாடு மூலம் சிங்களத் தலைமை மீண்டும் உறுதிப்படுத்தியிருக் கின்றது. அவ்வளவே.

# கல்வியாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்த முனைவது உலகின் நடைமுறைப் போக்குக்கு முரணானது

## பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப்.8

கல்வியாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்த முனைவது உலகின் நடைமுறைப் போக்குக்கு முரணானதாகும். இவ்வாறான சம்பவங்களை ஜனநாயக சிந்தனைக்கு உட்பட்ட நிலையிலிருந்து கண்டிக்கின்றோம்.

இம்மாதம் நான்காம், ஐந்தாம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து -

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

இலங்கைத் தீவில் ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திரத்தினத்தன்றும், அடுத்த நாளும் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சம்வங்கள் எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளிப்பதாகவுள்ளன. தற்போதைய நெருக்கடியான சூழலில் பொருளாதார இறுக்கம், மரணத்தோடு போராடும் வாழ்வு, கொலை, கொள்ளை, மனிதக் கடத்தல்கள், சிதைக்கப்படும் மனிதக் கௌரவம், மரண பயம், சீரான கல்வியின்மை என பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்த யாழ்ப்பாண சமூகமே முகம் கொடுத்து வருகின்றது. வெளிப்படையாக கூறுவதாயின் சுதந்திரமற்ற சுவாசத்திலேயே யாழ்.சமூகம் சீவித்து வருகின்றது.

இந்நிலையில் எமது மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தைப் பற்றி சிந்திப்பதற்கு அவர்களது அன்றாடப் பிரச்சினைகள் இடம் கொடுக்கவில்லை. இதனையே ஸ்ரீலங்காவின் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தனது சுதந்திர தின செய்தியில் சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. வெறும் சம்பிரதாய சடங்கு போல சுதந்திர தினம் எனும் பதத்தை சிந்திக்கத் தலைப்படுவதும், திணிக்க முயல்வதும் அக்கருத்து நிலையிலிருந்து நகர்வுகளை மேற்கொள்வதும் பயனற்ற விடயங்களே.

### பல்கலைக் கழகத்தை அச்சத்துக்குரிய பிரதேசமாக மாற்றும் முயற்சி

பல்கலைக்கழகத்தின் கற்றற் செயற்பாடுகளின் எதிர்காலம் பல்வேறு காரணிகளினாலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு சுதந்திரமான கற்றலுக்கு வாய்ப்பற்ற சூழலில் சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கும்படி எமது துணைவேந்தர், பேராசிரியர்களை நிர்ப்பந்தித்தமை பொருத்தமற்ற விடயமே. அதன் பின்னால் நடைபெற்ற விடயங்கள் அனைத்துமே குழம்பிப் போயுள்ள எமது கற்றல் சூழலை மேலும் குழப்பி பல்கலைக்கழகத்தை அச்சத்துக்குரிய பிரதேசமாக மாற்ற எத்தனிக்கும் முயற்சியே என எண்ணுகின்றோம்.

எமது மாணவனொருவனும் ஊழியர் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டும் மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டு ஒருவர் விடுவிக்கப்பட்டும் இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சூழலில், கல்வியை இடைநிறுத்தி எதிர்காலத்தை நோக்கியே ஏங்கி நிற்கும் நிலையில் நாம் சுதந்திர தினத்தைப் பற்றியோ அல்லது அதன் பின்னான விளைவுகள் குறித்தோ கவனம் செலுத்துவோம் என கருதுவது பொருத்தமற்றது.

இந்நிலையில், அறிவை மட்டும் துணையாகக் கொண்ட கல்வியாளர்களை ஆயுத முனையில் அச்சுறுத்த முனைவது நடைமுறை உலகின் போக்குக்கு முரணான விடயமாகும். இவ்வாறான சம்பவங்களை ஜனநாயக சிந்தனைக்கு உட்பட்ட நிலையிலிருந்து கண்டிக்கின்றோம். அத்துடன் இனி வரும் நாள்களிலாவது நாம் எதிர்பார்க்கும் சுதந்திரமான கற்றல் சூழல் எம்மைக் கிட்டும் என எதிர்பார்த்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ)

## மிருசுவிலில் ஒருவர் சூடுபட்டுக் காயம்

யாழ்ப்பாணம், பெப்.8

மிருசுவில் பகுதியில் நேற்று தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் மீது பிற்பகல் 4மணியளவில் இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். காயமடைந்த நிலையில் அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வரணி, குடமியனைச் சேர்ந்த குருநாதி முகுந்தன் (வயது 24), என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(அ-1-78)

## ஊர்காவலரின் மரணத்தை அடுத்து வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப்.8

வவுனியா இரட்டைப்பெரியகுளம் பகுதியில் ஊர்காவற்படையினர் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டமையை எதிர்த்து நேற்று அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 10. 10 மணியளவில் வவுனியா இரட்டைக் குளம் பகுதியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது வீதியில் ரயர்கள் எரிக்கப்பட்டன. இதனால் அங்கு இயல்புநிலை பாதிக்கப்பட்டது. போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. பின்னர் பொலிஸார் தலையிட்டு ஆர்ப்பாட்டத்தை சுமுகமான முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

கிராமங்களின் பாதுகாப்புக் கருதி நியமிக்கப்பட்ட ஊர்காவல் படை வீரருக்கே இந்நிலை என்றால் எங்களைப் பாதுகாப்பது யார் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

(ஐ)

### நாளை

தை - 26
வெள்ளிக்கிழமை
09.02.2007
திதி: சப்தமி
பின்னிரவு : 12.04
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு : 10.46
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]

## கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு; மாணவர்களின் பகிஷ்கரிப்பால்

யாழ்ப்பாணம், பெப்.8

வடமராட்சியில் கடத்தப்பட்ட, காணாமற்போன பாடசாலை மாணவர்கள் இது வரை விடுவிக்கப்படாமையால் குடாநாட்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளதாகக் கல்விசார் வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

வடமராட்சி பாடசாலைகளைச் சேர்ந்த இரு மாணவர்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டும், காணாமற்போயுமுள்ளனர். இவர்களை உடனடியாக விடுவித்து மாணவர்களின் கல்விக்கும், பாது காப்புக்கும் மதிப்பளிக்குமாறு கோரி வடமராட்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் கடந்த சில தினங்களாக குடாநாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்படுவதுடன் கற்றல் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட, காணாமற்போன மாண வர்கள் இதுவரை விடுவிக்கப்படாமையாலும், அவர்களது விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையாலும் குடாநாட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக கல்வி வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு விரைவில் காணப்படாவிட்டால் மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடையக்கூடிய அபாய நிலைமை ஏற்படும் எனவும் கல்விசார் வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை-

காணாமற்போன இரு மாணவர்களும் விடுவிக்கப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்வரை பகிஷ்கரிப்பு தொடரும் என மாணவர்கள் அறிவித்துள்ளனர். (அ-8)

## வேலணையில் சூட்டுக்கு இலக்கானவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.8

வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த உழவு இயந்திரச் சாரதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் நேற்று மாலை 5 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த கைலாயபிள்ளை பாலச்சந்திரன் (வயது 47) என்பவரே காயமடைந்தவராவார்.

பின்னால் வந்த படையினரின் மோட்டார் சைக்கிள் செல்ல பிரஸ்தாப நபர் இடம் கொடுக்கவில்லை என்றும் -

பின்னர் மறித்து அவரை விசாரணை செய்தபோது படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இவர் காயமடைந்தார் என்றும் - தெரிகிறது. (அ-1-78)

## கூட்டுறவு சமாசத்தில் பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் இதுவரை பொருள்களைப் பெற்றுக்கொள்ளாத ப.நோ.கூ. சங்கங்களைச் சேர்ந்த மக்களுக்கான பொருள் விநியோகத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட திகதிகளில் அந்தந்தப் ப.நோ.கூ. சங்கங்களைச் சேர்ந்த 150 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் பொருள் விநியோகிக்கப்படும் என்று சங்கத் தலைவர் தெரிவித்தார்.

ப.நோ.கூ. சங்கங்களின் விவரமும் அவற்றுக்கான திகதிகளும் வருமாறு:-

★ 12 ஆம் திகதி தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம், ★ 13 ஆம் திகதி கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், ★ 14 ஆம் திகதி பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம், ★ 15 ஆம் திகதி புலோலி ப.நோ.கூ. சங்கம், ★ 16 ஆம் திகதி நீர்வேலி ப.நோ.கூ. சங்கம், ★ 17 ஆம் திகதி ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ★ 18 ஆம் திகதி வேலணை ப.நோ.கூ.சங்கம், ★ 19 ஆம் திகதி புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கம், ★ 20 ஆம் திகதி அனலைதீவு ப.நோ.கூ.சங்கம், ★ 21ஆம் திகதி நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம், ★ 22ஆம் திகதி காரைநகர் ப. நோ.கூ.சங்கம்.(1-8)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## ஆயுள்வேத மருந்துகளை தயாரிக்கமுடியாத நிலை'

நல்லூர்,பெப்.8

யாழ். மாநகர சபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகளைத் தயாரிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து வகைகளுக்கு நல்லெண்ணை தேவை. ஆனால், தற்போது நல்லெண்ணையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதனால் ஆயுள்வேத மருந்துவகைகளைத் தயாரிக்க இயலாதிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (1-111)

## மட்டுவில் வாசியைக் காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,பெப்.8

மட்டுவில் கிழக்கில் உள்ள மோகனதாஸ் வீதியைச் சேர்ந்த செல்லையா சுரேந்திரன் (குட்டிமணி வயது 24) என்பவர் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமையில் இருந்து காணாமற் போய்விட்டதாக அவரது தாயாரால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அன்றையதினம் இரவு எட்டு மணியளவில் சாவகச்சேரி மடத்தடி இராணுவ முகாமிற்கு அண்மையில் அவர் காணாமற் போனதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-88)

## தியாகராஜா சுவாமிகள் ஆராதனை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.8

தியாகராஜா சுவாமிகளின் 160ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் நடத்தும் ஆராதனை விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மன்றத் தலைவர் ச.சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பஞ்சரத்தின கீர்த்தனை ஆராதனை, நாதாஞ்சலி மற்றும் இசை அர்ச்சனை போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறும்.(1-79)

## இலங்கை வங்கிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.8

இலங்கை வங்கியில் ஆளணி உதவியாளர்களுக்கு விண்ணப்பித்தவர்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர்களது பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் இது சம்பந்தமாக இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இப்பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. (1-88)

## பலாலி வீதியில் சிங்கக் கொடிகள்

யாழ்ப்பாணம், பெப்.8

திருநெல்வேலிப் பகுதியில் - பலாலி வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீடுகள் மற்றும் கடைகளின் முன்னால் சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

பலாலி வீதியில் - பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள கடைகள், வீடுகளின் வாசல்கள், இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடும் இடங்கள் ஆகியவற்றில் இந்தச் சிங்கக் கொடிகள் கட்டப்பட்டுள்ளதைக் காண முடிந்தது.(1-8)

## கல்வியியல் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் 2006ஆம் ஆண்டுப் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு இடம்பெறவுள்ளது என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதரப்பினருக்கும் அழுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் மதித்து நடப்பதாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உறுதியளித்திருக்கிறார். அரசாங்கத் தரப்பும் எமக்கு அத்தகைய உறுதிமொழியை வழங்கியிருக்கிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பினரும் மீறுகின்றபோது ஒரு தரப்பு மீது மட்டும் அதற்கான பொறுப்பைச் சுமத்துவது கடினமானது. தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அது தொடர்ச்சியான மோதல்களுக்கே வழிவகுக்கும்.

தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகக் கூறி அதனை நியாயப்படுத்தினால் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். இந்த நிலையில் நாம் ஒரு தரப்பினர் மீது மாத்திரம் குற்றஞ்சாட்டப் போவதில்லை. இரண்டு தரப்பினருக்குமே இதில் பெரும் பொறுப்பு உள்ளது.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளிலிருந்தும் மக்களின் வாழ்க்கை நிலைமை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மக்கள் ஒரு மாதத்துக்கு ஒவ்வொரு இடம் மாறிக் கொண்டே இருக்கிறார்கள். சாதாரண நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருப்பது போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல்களே. ஏ-9 வீதி மூடப்பட்டமை மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளமை போன்றன ஏற்றுக்கொள்ள முடியாதவை. மக்கள் தமது பகுதிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு முகாம்களில் வசித்து வருகின்றனர். கிளைமோர் குண்டுத் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

பாதுகாப்புக் காரணங்களால் போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு தம்மால் செல்ல முடியாதுள்ளது. நாம் போர்நிறுத்தத்தையே கண்காணிக்கிறோம். மோதல்களை அல்ல.

மோதல்கள் இடம்பெறும் பகுதிகளைக் கண்காணிப்பாளர்கள் சென்று பார்வையிட்டாலும், உடனடியாக அவர்கள் கொழும்பு திரும்பிவிடுவார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டாலும் அனைத்துப் பகுதிகளிலும் எமது செயற்பாடுகள் தொடரும். தேவையேற்படும்போது செயற்படுவதற்குத் தயாராக அவசர குழுவொன்று செயற்படும் - என்றார்.

(அ)

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை தேவதுரை

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த காசிப்பிள்ளை தேவதுரை நேற்று (07.02.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (08.02.2007) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
50/1, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.
**இராஜேந்திரம் (மகன்)**

## கனகரத்தினம் தட்சணாமூர்த்தி (சோதி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தட்சணாமூர்த்தி (சோதி) நேற்று (07.02.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் (வைரக்கனகர்)- மரகதம் தம்பதியரின் மகனும் பாலகிருஷ்ணன், சந்திரசேனன், சற்குணலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம், தங்கேஸ்வரி, புவனேஸ்வரி, சரோஜினி, செல்வராணி ஆகியோரின் சகோதரரும் ராஜேஸ்வரி, திலகவதி ஆகியோரின் அன்புக் கணவரும் ஜெயராம், திவாகரன், போஜன், மயூரன், காந்தன், புவிதாலக்சுமி, சரவணவபவன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் தந்தையும் சிவகாமி, சிவநேந்திரகௌரி, சீதாதேவி, சிறிதரன், காயத்திரி, சங்கீதா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2007) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, சேர்.பொன்இராமநாதன் வீதி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2225185.

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

## சைவப்புலவர் திருமதி தங்கேஸ்வரியம்மா தங்கராஜா



**(இளைப்பாறிய ஆசிரியை)**

கைதடியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி தங்கேஸ்வரியம்மா தங்கராஜா 06.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சேதுப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கராஜாவின் (இளைப்பாறிய அத்தியட்சகர், இ.போ.ச) அன்புத் மனைவியும் தங்கசுதன் (தலைமையகம், இலங்கை வங்கி), தங்கசொரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயகௌரி (கொழும்பு), ராஜரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரணவி, கோகுலன், ரஜீபன், சில்வியா, றிபேக்கா ஆகியோரின் பாசம்மிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற செல்லம்மா, சின்னையா (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் கனிஷ்ட சகோதரியும் பொன்னுத்துரை (தொல்புரம்), காலஞ்சென்ற துரைசிங்கம், சொர்ணபூபதி, இலட்சுமியார், காலஞ்சென்ற முருகேசு ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற திரு.திருமதி. முருகேசு, தம்பிராஜா தம்பதிகள் ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 10.02.2007 சனிக்கிழமை காலை 7.30மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக மு.ப 10மணிக்கு கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

35, Waidya Rd, Dehiwela.
T.P:2731652 - கொழும்பு,
0033616443437 - பிரான்ஸ்.

தகவல் :
**கணவர்,**
**பிள்ளைகள்.**

## திருமதி சரோஜினிதேவி இராமச்சந்திரா



வத்தனை, புலோலி தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி இராமச்சந்திரா 05.02.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வத்தனை, புலோலிமேற்கைச் சேர்ந்த முருகுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் மந்திகை, புலோலிதெற்கைச் சேர்ந்த சிவஞானசுந்தரம்-பொன்மலர் தம்பதியரின் மருமகளும் இராமச்சந்திராவின் அன்பு மனைவியும் மைதிலியின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் தர்மலிங்கம், சோமசுந்தரம், குழந்தைநாயகி, பத்மராணி, தனபாக்கியம், வயிரமுத்து (கனடா), திருநாவுக்கரசு (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் மங்கையர்க்கரசி (கனடா), கோமதி, மகேஸ்வரி, சுப்பையா, காலஞ்சென்ற இராசையா (V.M.R) மற்றும் சிவபாதம், இந்திராணி (கனடா), தெய்வநாயகி (சுவிஸ்), இராசேந்திரா, சிவமணி ஆகியோரின் மைத்துனியும் மனோன்மணி, தவச்செல்வம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 06.02.2007 செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுப் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னார் சுகவீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரண்டாம் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த வேளை அன்னாருக்கு ஆதரவு காட்டிச் சிகிச்சையளித்த யாழ்.போதனா வைத்தியசாலைச் சமூகத்தினருக்கும் சிறப்பாக வைத்தியநிபுணர் டாக்டர் பேரானந்தராசா அவர்களுக்கும் அவருடன் இரண்டாம் விடுதியில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரரின் இறுதிநிகழ்வில் கலந்து கொண்டோர், ஊர்வலத்தில் பங்குபற்றியோர் இன்னும் சந்தர்ப்பம் நோக்கிச் சாலவும் உதவியோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வத்தனை,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

(57829)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# வாகரையிலிருந்து படைகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. அப்பாவிப் பொதுமக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

இந்த சபையில் பேசிய பிரதமர் தாக்குதல் சம்பவங்களின்போது கொல்லப்பட்டவர்களின் விவரத்தை இங்கே குறிப்பிட்டார். அதில் வடக்கு, கிழக்கில் கொல்லப்பட்டவர்களின் விவரத்தை வெளியிடாதது ஏன்?

மட்டக்களப்பு மற்றும் வாகரைப் பிரதேசங்களில் கருணாகுழு என்றும் துணைப் படைகள் என்றும் திரியும் தமிழ் துரோகக் கும்பல்கள் நேரடியாகவே அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்றன. இவர்களுக்கு அரச படையினரின் ஆதரவும் கிடைக்கின்றது.

**மரணபீதியுடன் வாழ்கின்றனர்**

வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் இன்று மரண பீதியுடன் வாழ்கின்றனர். உயிருக்குப்பயந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சரணடைகின்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப் பதிகாரியும், உறுப்பினர்களும் சாதாரண படைச் சிப்பாய்களினால் தாக்கப்படுகின்றனர்.

இப்படியான நிலையில் உங்களுடைய அரசில் எப்படி மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்?

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் தான் என்பதை உணரவேண்டும். சுதந்திர மாக வாழும் நிலைக்கு உத்தரவாதம் அளிக் கப்பட வேண்டும்.

- என்றும் ஸ்ரீகாந்தா கூறினார்.

# பூஸாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- மல்லாகம், எம்.சாந்தகுமார் (வயது-27) - மட்டக்களப்பு, பி.முகுந்தன் (வயது-22) - யாழ்ப்பாணம், யோ.யோகேஸ் - யாழ்ப்பாணம், எஸ்.ஜெகதீஸ்வரன் - யாழ்ப்பாணம், எஸ்.யோகராஜா (வயது-42) - யாழ்ப்பாணம், டி.யசோதரன் - யாழ்ப்பாணம், எஸ்.விஜயீஸ்வரன் - யாழ்ப்பாணம், வி.ஸ்ரீகுமார் (வயது-28) - டிக்கோயா, எம்.தியாகராஜா (வயது-24) - பசறை, ஏ.லோபிற்சன் - கொழும்பு, பெ.சந்திரசேகர் - கொழும்பு, முகமட் பாருக் - கொழும்பு, ஜி.விஜயகுமார் - யாழ்ப்பாணம், தி.பாலேந்திரன் - யாழ்ப்பாணம், வி.குலேந்திரன் - யாழ்ப்பாணம், வி.கெனடி ஜோன்சன் - கொழும்பு, சுப்பிரமணியம்சசிப்பிரியா - யாழ்ப்பாணம், நல்லம்மா - யாழ்ப்பாணம்.

இவர்களில் கடந்த 16 வருடங்களாக கனடாவில் வசித்துவந்த தாமோதரம் சண்முகவடிவேல் (வயது-32) கடந்த 8ஆம் திகதி கிரான்பாஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு 29 நாள்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*திருமதி*

## நவரட்ணம் புவனேஸ்வரி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.08.1933 | 19.01.2006 |

**திதி: சஷ்டி 08.02.2007**

என் அன்புத் தெய்வமே ஆருயிரே அம்மா
என்னை விட்டு ஒரு நிமிடமேனும்
பிரிந்திருக்க மாட்டீர்களே அம்மா
வழிமேல் விழிவைத்துப் பார்த்திருப்பீர்களே அம்மா!
இப்போ என்னை ஆறாத் துயரில் தவிக்கவிட்டுச் சென்று விட்டீர்களே அம்மா!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறிடுமா உங்கள் நினைவுகள்
விண்ணும் மண்ணும் உள்ளவரை நின் நினைவிருக்கும் என்னுடன்

(57827)

**உங்கள் ஆத்மா சாந்தியடைய யாம் பிரார்த்திக்கும்**

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, இருபாலை.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
**அன்பு மகள் மற்றும் குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா நடராசா

கல்லூரி வீதி, ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா நடராசா நேற்று 07.02.2007 காலமானார்.

அன்னார் அமரர் பொ.நடராசாவின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரன், திருமதி செல்வரட்ணம் ஜெகநாதன் (ஆசிரியை- யா/வட இந்து மகளிர் கல்லூரி), செல்வி இன்பமலர் நடராசா (முன்னாள் ஆசிரியை- யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் ஆ.ஜெகநாதன் (அதிபர்- யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), திருமதி நகுலா மகேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியும் ஜெ.ரிஷிகேசன், ஜெ.கௌதமன், துர்க்கா ஆகியோரின் பேர்த்தியும் இராசையாவின் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*ஆத்தியடி, பருத்தித்துறை.*

*தகவல்:*
**ஆ.ஜெகநாதன்**
*(மருமகன்).*

## மயில்வாகனம் மகாலிங்கம்சிவம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர், மண்கும்பான்)



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கசிவம் நேற்று (07.02.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இராசம்மா தம்பதியரின் புத்திரரும் அருளம்பலம் - காலஞ்சென்ற பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சூரியகலா, மதிவர்ணன் (யா/தொழில்நுட்பக் கல்லூரி), மகாதேவன் (சுன்னாகம், நிலோஜன் பல்பொருள் வாணிபம்), சந்திரகலா, இந்திரகலா (நோர்வே), மகிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ஜெயரட்ணம், கல்யாணி, றாஜினா, செல்லா (நோர்வே) ஆகியோரின் மாமனும் அனுசியா, ஜெயூரன் (நோர்வே), மையினா, யசோ, லக்சன், வித்தியா, குமரன் கௌசியன் (நோர்வே), விகுசியா, சாமினி, லிலோசன், பிரவீன் (நோர்வே) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சிவப்பிரகாசம் (வர்த்தகர்), காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (அலச்சாண்டர் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை), பாலசுப்பிரமணியம், சந்தரலிங்கம் மற்றும் விநாயகமூர்த்தி (பூநகரி MCS) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினகிளி, மற்றும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் கனகரட்ணம், யோகேஸ்வரி, றாகினிதேவி (பிரான்ஸ்), றஞ்சலாதேவி (சுவிஸ்), கலியுகவரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (08.02.2007) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலங்கை வங்கி அருகாமை,**
**கே.கே.எஸ்.வீதி,**
**சுன்னாகம்.**

(57830)

தகவல் :
ம.பரமேஸ்வரி
(மனைவி).

## தவறிவிட்டது

அமிர்தநாதர் தயான் என்பவருடைய தே.அ.அட்டை (740102397V) தவறிவிட்டது.

தொடர்பு : அமிர்தநாதர் தயான்,
217, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
தொ.பே:0776991579

55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN AutoCAD
DIPLOMA IN C"
தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
Start on:07.10.02.07

## விற்பனைக்கு

யாழ்.நாவலர் வீதியில் 2 1/2 பரப்பில் அமைந்த 40 அடி அகலம் 60 அடி நீளம் கொண்ட வீடும், காணியும் விற்பனைக்குண்டு. மற்றும் (பெருமாள் கோயிலடிச் சந்திக்கும் பிறவுண் றோட் சந்திக்குமிடையில்) யாழ்.ஸ்ரான்லி வீதியில் 15 அடி அகலம் 40 அடி நீளம் கொண்ட கடையும், கந்தர் மடத்தில் சுற்றுமதிலுடன் 2 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0776660631**

## உடனடியாகத் தேவை

**பத்திரிகை விநியோகிப்போர்-கொழும்பு**

கார்/மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படுவோருக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் உதயன் அலுவலகத்தில் ஆளணி முகாமையாளரைச் சந்திக்கவும்.

**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## காணவில்லை



ரங்கநாதன் ரஞ்சன் (அ.அ.இல 771194346V) கடந்த வெள்ளிக்கிழமை (02.02.2007) முதல் இவரைக் காணவில்லை. இவர் சீடி விநியோகம் செய்பவர். சாதுவான சுபாவம் உடையவர். இவர் வீட்டிலிருந்து புறப்படும் போது துவிச்சக்கரவண்டியில் சென்றார். தயவு செய்து இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் எமக்கு தெரியப்படுத்தவும். அத்தகவல் எம்மால் இரகசியமாகப் பேணப்படும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இவரை விடுவித்து எனக்கு உதவுமாறு உங்களை இரந்து கேட்டுக்கொள்கின்றேன்.

2nd Lane, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
T.P:0776685138

மகனைத் தேடித் தவிக்கும்:
ரங்கநாதன் [illegible] (தாய்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org